DINAMALAR 28 DEC 09

புதிய வீட்டில் கால் பதித்த பயனாளிகள்!

நடுஹட்டி கிராமத்தில் கிரஹப்பிரவேசம்

கோத்தகிரி, டிச. 28-

கோத்தகிரி நடுஹட்டி கிராமத்தில் கட்டப்பட்ட புதிய வீடுகளுக்கு, நேற்று கிரஹப்பிரவேசம் நடத்தப்பட்டது.

நீலகிரி மாவட்டத்தில், நவம்பர் மாதம் பெய்த கனமழையால், கோத்தகிரி நடுஹட்டி கிராமத்தில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு 4 வீடுகள் முழுமையாக பாதிக்கப்பட்டன; கமலா என்பவர் உயிரிழந்தார்; பலர் காயமடைந்தனர். நடுஹட்டி சுற்றுவட்டார கிராம இளைஞர்கள், பேரிடர் பாதுகாப்பு படையினர், நடுஹட்டி ஊராட்சி நிர்வாகத்தினர், சீரமைப்பு பணிகளில் ஈடுபட்டனர். கோத்தகிரி பொரங்காடு சீமை 19 ஊர் தலைவர் பீமா கவுடர் தலைமையில், சமுதாய தலைவர்கள் மற்றும் பிரமுகர்கள், சேதத்தை பார்வையிட்டு, நிவாரணத்துக்காக முதற்கட்டமாக, ஒரு லட்சத்து 70 ஆயிரம் வழங்கினர்.

பாதிக்கப்பட்ட நான்கு குடும்பங்களுக்கு, சமுதாயம் சார்பில், ஒரு மாதத்துக்குள் புதிய வீடுகள் கட்டித் தரப்படும் என பொரங்காடு 19 ஊர் சார்பில் முடிவெடுக்கப்பட்டது. இதற்காக, பொரங்காடு 19 ஊருக்கு உட்பட்ட 120 குக்கிராமங்களில் வசிக்கும் அனைத்து குடும்பங்களிலும் நிதி வசூலிக்கப்பட்டது. டிசம்பர் முதல் தேதியன்று, படுகர் சமுதாயத் தலைவர்கள் முன்னிலையில், பூமி பூஜை நடத்தப்பட்டு கட்டுமானப் பணிகள் துவங்கப்பட்டன.

கோத்தகிரி நடுஹட்டி கிராமத்தில் கட்டப்பட்ட வீடுகளில் குடியேறுபவர்களிடம், பொரங்காடு 19 ஊர் தலைவர் பீமா கவுடர், சாவி வழங்கினார்.

கோவை ஈஷா யோகா மையத்தை சேர்ந்த அன்பர்கள், குன்னூர் பிராவிடன்ஸ் மகளிர் கல்லூரி மாணவியர் உட்பட பலர், இப்பணிகளில் ஈடுபட்டனர். தவிர, கோத்தகிரி தனியார் தேயிலைத் தொழிற்சாலை உரிமையாளர்கள் சிலர், கட்டுமானப் பொருட்களை கொண்டு வர, வாடகையில்லாமல் வாகனங்கள் வழங்கினர். மின்வசதியுடன் கூடிய வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு நேற்று கிரஹப்பிரவேசம் நடத்தப்பட்டது; சிறப்பு அழைப்பாளராக பங்கேற்ற, மாநில பேரிடர் மேலாண்மை ஆணையர் சுந்தரதேவனுக்கு, ஊர் மக்கள் மற்றும் சமுதாய தலைவர்கள் சார்பில் வரவேற்பு அளிக்கப்பட்டது.

வீட்டு உரிமையாளர்களிடம் சாவி ஒப்படைக்கப்பட்டது. பொரங்காடு 19 ஊர் தலைவர் பீமாகவுடர், நாக்குபெட்டா நலச்சங்க தலைவர் ரங்காகவுடர், ஆண்டிகவுடர், சமுதாய பிரமுகர்கள் பெள்ளிராஜ், போஜராஜன், ஆரி, வக்கில் தியாகராஜன், ஆனந்த், சாந்திராமு, பெள்ளு உட்பட பொரங்காடு 19 ஊருக்கு உட்பட்ட கிராமங்களில் இருந்து பலர் பங்கேற்றனர். வீடுகள் கட்ட உதவிய சமுதாய பிரமுகர்களுக்கு பாராட்டு தெரிவிக்கப்பட்டது. நடுஹட்டி ஊர் தலைவர் நஞ்சாகவுடர் நன்றி கூறினார்.